IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,

TENKASI.

**MCOP.No. 167/2021**

**நாள்– 05.02.2025**

**ம.சா.1 திரு. சேதுராஜா –** சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

இந்த வழக்கில் விபத்து நடந்த பகுதி ஒரு வளைவான பகுதி என்றால் சரிதான். TN–76–AP–0659 Splender பைக்கை நான் தான் ஓட்டி சென்றேன் என்றால் சரிதான். சம்பவத்தன்று நான் வாகனம் ஓட்டும்போது நான் இளவர் என்றும், எனக்கு ஓட்டுநர் உரிமம் கிடையாது என்றும் சொன்னால் சரிதான். எனது வாகனத்தின் பின் இருக்கையில் அமர்ந்து பயணம் செய்த கனகராஜ் ஒரு இளவர் என்றால் சரிதான். தென்வடல் ரோட்டில் தான் விபத்து நடந்தது என்று சொன்னால் சரிதான். இந்த விபத்தில் சம்பந்தப்பட்ட மற்றொரு வாகனத்தின் ஓட்டுநரின் பெயர் விவரங்கள் போலீசார் சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். கனகராஜ் புகார் கொடுத்த விவரம் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். TN–72–BL–7164 பதிவெண் கொணட பல்சர் வாகனத்தை ஓட்டிய 1ம் எதிர்மனுதாரருக்கும் விபத்தில் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்திற்கு யார் காரணம் என்பது பற்றி விபத்து சமயத்தில் எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயங்கள் குணமாகிவிட்டன என்றால் சரியல்ல, இன்னும் உள்வலி உள்ளது.

1ம் எதிர்மனுதாரர் என் மீது விபத்து வழக்கு தாக்கல்செய்து, அது நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் தான் வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வளைவு பகுதி என்பதை உணராமல் வாகனத்தை இயக்கி விபத்தை ஏற்படுத்திவிட்டேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த பகுதி அகலமான ரோடு என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் சம்பவத்தின்போது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்தார் என்றால் சரிதான். விபத்து நடந்த பகுதிக்கு 50 அடி தொலைவில் மற்றொரு வளைவு உள்ளது என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் உள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. விபத்து

சம்பந்தமாக 1ம் எதிர்மனுதாரர் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டது சம்பந்தமாக என் மீதும், கனகராஜ் மீதும் 1ம் எதிர்மனுதாரர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் செய்து, அது தொடர்பாக எங்களிடம் விசாரணை செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

விபத்திற்கு நான் தான் முழு காரணம் என்றும், 1ம் எதிர்மனுதாரர் மீது எந்த தவறும் இல்லை என்றும், 1ம் எதிர்மனுதாரர் சாலை விதிகளை கடைபிடித்து இடது புறமாக வாகனத்தை ஓட்டிவந்தார் என்றும், நான் தான் எனது வாகனத்தில் அதிவேகமாக வந்து 1ம் எதிர்மனுதாரர் மீது மோதி விபத்து ஏற்படுத்திவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்து சம்பந்தமான குற்ற வழக்கில் தயார் செய்யப்பட்ட மாதிரி வரைபடத்தை ஆய்வு செய்தால் அது எனது தரப்பு வழக்கிற்கு பாதகமாக அமையும் என்பதால் வேண்டுமென்றே அதை தாக்கல் செய்யாமல் தவிர்த்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல.

நான் ஓட்டிசென்ற வாகனத்தின் உரிமையாளரையோ, வாகனத்தின் காப்பீட்டு கழகத்தையோ இம்மனுவில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது மனு தள்ளுபடிசெய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi